பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலைரூபா 5·00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 17 சனிக்கிழமை (01· 07· 2000) VALAMPURI ஒலி: 194

# யாழ். குடா கைப்பற்றப்படும் வரை
# ஓயாத அலைகள் ஓயப்போவதில்லை

## தமிழ் கார்டியனுக்கு அன்ரன்பாலசிங்கம் பேட்டி

(விசேட நிருபர் கொழும்பு)

**பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் இடைக்கால நிர்வாக சபையையோ சிங்கள பேரினவாதிகளால் இணக்கம் காணப்பட்ட உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தநகல் வரைபையோ தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.**

**யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தை வெளியேற்றும் வரை ஓயாத அலைகள் ஓயமாட்டாது.**

இவ்வாறு தமிழ்க் கார்டியன் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தமிழீழத்தின் எழுபது வீதமான நிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இன்றுவரை இருந்து வருகிறது. இந் நிலையில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை வடக்குக் கிழக்கில் ஏற்படுத்துவதென்பது ஒரு கேலிக்கூத்து மட்டுமல்ல அரசின் கற்பனையிலான முடிவுமாகும்.

இத்தகைய தீர்வுத் திட்டங்கள், இடைக்கால நிர்வாக சபை போன்றவை 1995, 1996, 1997 ஆம் ஆண்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்சினை ஒரு உள்நாட்டு விவகாரம்; நோர்வே தலையிடக்கூடாது!

### அமரபுர மகாநாயக்கதேரர்

இலங்கைப் பிரச்சினை முழுக்க முழுக்க ஒரு உள்நாட்டு விவகாரமாகும் இதில் நோர்வே அரசாங்கம் தலையிடுவதை நாங்கள் விரும்பவில்லை;

இவ்வாறு நேற்று முன்தினம் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹைமைச் சந்தித்த அமரபுர நிக்காயாவின் மகாநாயக்க தேரர் மடிஜே சன்யாபுர தேரர் தெரிவித்துள்ளார்:

எரிக்சோல்ஹைம் இந்தியா செல்வதற்கு முன் பிரதான புத்த மதத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். [ச-வ]

## தமிழர்கள் உரிமை பெறுவதற்கு தடையாக இருக்கப் போவதில்லை

### சிறிசேனகூரே தகவல்

இலங்கை அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்திற்கு அமைய தமிழர்களுக்கு உரிமைகள் வழங்குவதில் ஆட்சேபனை எதுவும் இல்லை, இவ்வாறு புதிய அரசியல் கட்சியான பிரஜைகள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தப் பதின்மூன்றாவது திருத்தத்தின் படி தமிழர்களுக்கு உரிமைகள் வழங்குவதற்கு எமது கட்சி தடையாக இருக்காது ஆனால் நாடு பிளவு படுவதை நாம் ஏற்கப் போவதில்லை என்றும் சிறி[illegible] மாநாட்சேனகூரே கூறினார்.

## கப்பல் பயணக் கட்டணத்தில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்கான 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் பயணக் கட்டணத்தில் புதிய சில நடைமுறைகள் பின்பற்றவுள்ளதாக யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் ஆறு வயதில் இருந்து பதினாறு வயதிற்குட்பட்டவர்களுக்கு அரைரிக்கற் கட்டணமாக 500 ரூபாவும் பதினாறு வயதும் அதற்கு மேற்பட்டவர்களுக்குக் 1000ரூபாவும் அறவிடப்படும்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலி இளைஞன் காங்கேசன் தடுப்புமுகாமில் இல்லை!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட்ட அச்சுவேலியைச்சேர்ந்த குணரட்ணம் றஜித் (வயது 20) என்பவர் தடுப்பு முகாமில் இல்லை என யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ். ஜீவேஸ்வரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை புத்தூர் மேற்கு கிராமசேவையாளர் உட்பட பன்னிரண்டு பேர் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-12)

## தணிக்கை செய்ய அதிகாரமில்லை

செய்திகளைத் தணிக்கை செய்யும் தகுதி வாய்ந்த அதிகாரி ஆரிய ரூபசிங்கவிற்கு தணிக்கை செய்யும் அதிகாரம் இல்லையென உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. [ச]

## திருமலைநகரம் இன்று புறப்படும்

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளுடன் புறப்பட்ட ''சிற்றிஒவ்றிங்கோ'' நேற்று முன்தினம் திருமலையை அடைந்ததாகவும் இக்கப்பல் 350 பயணிகளுடன் இன்று திருமலையிலிருந்து புறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## கலைஞர்களுக்கான ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தினரால் மாதாமாதம் நடைபெற்றுவரும் கலைஞர்களுக்கான வழிபாடும் ஒன்றுகூடலும் நாளைக் காலை 10 மணிக்கு குளமங்கால் மல்லாகத்தில் இடம்பெறவுள்ளது.

## இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார் கட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இரு பொது மக்கள் காயமடைந்துள்ளனர்:

நாயன்மார் கட்டு வீதி நல்லூரைச் சேர்ந்த மாணிக்கவாசகர்விக்னேஸ்வரன் (வயது 59) என்பவர் நெஞ்சிலும், கோவில் வீதியைச் சேர்ந்த குலசிங்கம்லீலாவதி (வயது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த கப்பலுக்கான முன்னுரிமை பதிவுகள் முடிவடைந்து விட்டது

யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கு அடுத்ததாக செல்லவுள்ள ''சிற்றிஒவ் றிங்கோ'' கப்பலுக்கான பயணிகளை முன்னுரிமை அடிப்படையில் பதிவுசெய்தல் முடிவடைந்துவிட்டதாக யாழ். சிவில் நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் அரசியல்க் கட்சி உறுப்பினர்கள் ஆகியோருக்கும், அவசர தேவை கருதி செல்லும் பொது மக்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

அடுத்துச் செல்லவுள்ள கப்பல் தவிர்ந்த எனைய கப்பல்களுக்கான முன்னுரிமைப் பதிவுகளே தற்போது நடைபெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-3)

## யாழ். மாவட்ட தொண்டராசிரியருக்கு விரைவில் ஆசிரிய நியமனம்

### ஈ.பி டி.பி தகவல்

யாழ், மாவட்டத்தில் இதுவரை ஆசிரியர் நியமனத்திற்குள் உள்வாங்கப்படாத தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈ: பி. டி, பியின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் க: மணி பல்லவராஜன் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளார்;

தொண்டர் ஆசிரியர்களின் நிலைகுறித்து ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறப்பட்டதை அடுத்து உடன் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சருக்கு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (ந)

## எரிபொருள் தட்டுப்பாடு நீங்கி உள்ளது

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாநாட்டில் அண்மையில் எரிபொருளுக்கு நிலவிய தட்டுப்பாடு தற்பொழுது வெகுவாக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனியார் எரிபொருள் விற்பனை முகவர்களுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினரால் பெற்றோல் டீசல் வழங்கப்பட்டு வருவதனாலேயே இவற்றுக்கான தட்டுப்பாடு நீங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மண்ணெண்ணையும் தனியார் எரிபொருள் விற்பனை முகவர்களுக்கு வழங்கப்படவுள்ளதால் மண்ணெண்ணெய்க்கான தட்டுப்பாடுநீங்குவதுடன் கறுப்பு சந்தையில் விலை குறைவு ஏற்படும் என எரிபொருள் பாவனையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். [ச-7]

## சண்டேலீடர் தடை நீக்கம்

அவசர காலச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருந்த சண்டே லீடர் பத்திரிகை மீதான தடையை உடனடியாக நீக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியுள்ளது;

சண்டே லீடர் மீதான தடையை எதிர்த்து அந்த நிறுவனம் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இந்த வழக்கின் மீதான தீர்ப்பிலேயே மூன்று நீதிபதிகள் அடங்கிய உயர் நீதிமன்று இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

நீதிபதிகளான ஏ: ஆர்.பி. அமரசிங்க, ஆர். எம். டியூ ரெட்ணா, அமிர்ஸ்மாயில் ஆகியோரே இத்தீர்ப்பை வழங்கியவர்களாவர்.

இப்பத்திரிகை நிறுவனத்திற்கு வழக்குச் செலவாக ஒரு லட்சம் ரூபாவை எட்டு வாரங்களுக்குள் அரசு செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (வ-ச)

## க- பொ- த- சாதாரணதர விண்ணப்ப முடிவு-யூலை 31

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. சாதாரணதரப்பரீட்சை டிசம்பர் 2000க்குரிய விண்ணப்பங்கள் பரீட்சைத் திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளது விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 31ஆம்திகதியாகும்

ஒரு பாடத்திற்குரிய பரீட்சைக் கட்டணம் ரூபா 15உம் இரண்டு பாடங்களுக்கு ரூபா 20உம் மூன்று பாடங்களுக்கு ரூபா 25உம் நான்கு பாடங்களுக்கு ரூபா 30 உம் ஐந்து பாடங்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சின்னஞ்சிறு விளம்பரம்

### அபூர்வ ஜோதிடநிலையம்

சலதோசம் உருவாக்கும் இடி புன்னை மாற்றிவிடல், தொல்லைதரும் குஷ்டரோகம் அறவே நீக்கம், கல்வி, தொழில், திருமணம், அதிஷ்டமாக அமைதல் சனிஞாயிறு A-M8.30-1.00No30Aபலாலி வீதி, ஆலடிச்சந்திகந்தர்மடம். (1324)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக்கோழிகளை சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீதியோ செல்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி நல்லூர் (1314)

### தவறிவிட்டது

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியில் வசிக்கும் நாகேந்திரம் தர்சிகா என்பவருடைய விசேட அடையாள அட்டை துணவிச் சந்திக்கும் சங்கரத்தை குளத்தடிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டு எடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு வழங்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கண்ணன் களஞ்சியம், துபாற்கந்தோரடி சங்கரத்தை வட்டுக்கோட்டை. (1403)

திருமதி இராசதுரை கலைவாணி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், விஷேட அடையாள அட்டையும் 25 6 2000ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி சந்தைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள நெல்லியடி அருண் வீடியோக்கடையில் ஒப்படைக்கவும். தகவல் தருபவர். க. இராசதுரை கிராம அலுவலர், ஆவரங்கால், புத்தூர். (1412)

### வெளிவந்துள்ளன

A/L மாணவர்களுக்குரிய ஆசிரியர் திரு. பதமராஜா அவர்களின் இந்து நாகரிகம், இந்து சமயம, 500 வினா விடைகள் அடங்கிய புத்தகம் வெளி வந்துள்ளன. கிடைக்குமிடங்கள் விக்னா கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம் கிறிஸ்ரல் கல்வி நிறுவனம், நெல்லியடி. (1397)

### OL MATHS 2000

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 35 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தனித்தோ சிறுகுழுக்களாகவோ சேர்ந்து உங்கள் வீடுகளில் கற்றுக் கொள்ளவும். க. ஆறுமுகநாதன் C.O. T. செல்வராசா ஹரிஸ் களஞ்சியம் 4ம் கட்டை ஆனைக்கோட்டை, மானிப்பாய். (1371)

### புலமைப் பரிசில்

வழமைபோல் இன்று எமது சகல பரீட்சை நிலையங்களிலும் பரீட்சைகள் நடைபெறும்.

பிரபல்யமானபுத்தகசாலைகளிலும் எமது இன்றைய வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம் BOND யாழ். நகர். [422]

### விற்பனைக்கு

உயரமான கறுப்பு நிற ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு 28, பேரின்பநாயகம் வீதி (கச்சேரிக்கு பின்புறம்) யாழ்ப்பாணம். (1409)

வயலின், தம்புரா, காரமோனியம் நிப்பொன் "12 கறுப்பு வெள்ளை T.V. அன்ரனா பூஸ்ரருடன் MT 50 HONDA மோட்டார் சயிக்கிள். தி. திருக்குமான் வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு சுழிபுரம். (1167)

தையல்மெசின், மின்மோட்டோஸ், குளிர்சாதனப்பெட்டி மற்றும் வீட்டுத் தளபாடப் பொருட்கள் சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம் திருமதி ஞா. சாந்தினி 15, சிவபிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (1419)

### திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல் சகல சமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ்கன் புகைப்படத்துறையைச் சார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும சு. நாராயணசாமி 301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி கன்னாதிட்டிச் சந்திக்கருகில் யாழ். (1377)

## ஸ்ரீசெல்வா

யாழ்ப்பாணம்

அநேகரின் வேண்டுதலுக் கிணங்க மீண்டும்

கார்த்திக். மந்த்ரா

**கண்ணன் வருவான்**

[வெட்டுப்படாத பாடல் காட்சிகளுடன் பிரமிட் CD பிரதி]

10.30, 2.00 [ப.நே]

(இ-499)

## லஷ்சுமி

(இணுவில்)

இன்று முதல்

சத்தியராஜ், தேவயாணி வடிவேல், சரளாவின்

**என்னம்மா கண்ணு**

10.30, 2.30 [ப.நே]

(இ/538)

## 'ராஜா'

யாழ்ப்பாணம்

விஜய். மந்திரா ரகுவரன் சுபலக்சுமி நடித்த

**லவ் டுடே**

புதியநேரம் 10-30 – 2-00

03-07-2000 முதல்

**அருணாச்சலம்**

[இ/555]

## நாகம்ஸ்

சுன்னாகம்

3வது வெற்றிவாரமாக கார்த்திக், ரோஜா, அஜித் நடித்த

**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**

(நீலம்)

11.00, 2.30 [பு.நே]

(இ/468)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடபரீட்சைகள் 1998/99**

வணிக/தொழில் நிர்வாகமாணி முதலாம் வருட இரண்டாம் அரையாண்டுப்பரீட்சை-1999 வணிக/தொழில்நிர்வாகமாணி பகுதி I பரீட்சை-1999 வணிக/தொழில் நிர்வாகமாணி பகுதி II பரீட்சை-1999 வணிக/தொழில் நிர்வாகமாணி பகுதி III பரீட்சை-1998/99

மேற்குறித்த 1998/1999 ஆம் ஆண்டு பரீட்சைகளுக்கு தகுதியுடைய மாணவர்கள் முகாமைத்துவ கற்கைகள், வணிகபீட அலுவலகத்திலிருந்து உரிய விண்ணப்பப் படிவங்களை 2000.07 03 திகதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 2000.07 20 திகதிக்கு முன்னர் முகாமைத்துவ வணிககற்கைகள், வணிக பீடாதிபதி அலுவலகத்திற்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

மீள் பரீட்சைகள் ஒரு பாடத்திற்கு ரூபா 50/. வீதம் பல்கலைக்கழக காசாளரிடமோ அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மக்கள வங்கிக்கிளையிலோ பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றன.

2000. 07. 20 ஆம் திகதிக்கு பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்

(இ/605)

## அறிவித்தல்

பளை, பளை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறையில் (கிராம கோட்டுச்சந்திக்கு அருகாமையில்) தற்காலிகமாக காரியாலத்தை ஆரம்பித்துள்ளது. 5-07-2000 ஆம் திகதி சகல இயக்குனர் சபை உறுப்பினர்களையும் காரியாலயத்திற்கு சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

-நன்றி-

தலைவர்

[1427] பளை ப. தெ. வ. அ. கூ. சங்கம்:

## ரஷ்யாவில் உயர் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா, மொஸ்கோ போன்ற பல்கலைக்கழகங்களுக்கு கீழ்க்காணும் துறைகளில் கல்வி பயில அனுமதி பெற்றுத் தரபபடும்.

1. மருத்துவம் (ஆங்கிலம்)
2. பொறியியல் (ஆங்கிலம்)
3. கணனியியல் (ஆங்கிலம்)
4. ஏனைய துறைகள் (சட்டம், பொருளாதாரம் போன்றவை)

விண்ணப்ப முடிவு: 15 - 7 - 2000

Dr. க. சிவனடியான். நவாலி, மானிப்பாய். (1428)

### தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கொடிகாமம்

## பதவி வெற்றிட விளம்பரம்

கீழ்க் குறிப்பிடும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சங்க எல்லைப் பரப்பில்வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிப்போர் 14.07 2000 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம், கொடிகாமம். என்ற முகவரியில் நேரில் கையளிக்கவேண்டும். முடிவுத் திகதிக்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்கள ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பக் கடித இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்பத்துடன் தகைமைப் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

(1) வாகன சாரதி - 13 (165/88)
சம்பள அளவுத் திட்டம் -
2800—65×10—80×10—4250(31/97)
தகைமைகள்.
5 ஆம் வகுப்புச் சித்தியுடன் பஸ்/லொறி/டிரக்டர் (பெட்டியுடன்) செலுத்தும் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும் அத்துடன் குறைந்தது நான்கு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
வயது எல்லை.
18 வயதுக்கு குறையாதவராயும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல்வேண்டும்.

(2) வாகன சுத்திகரிப்பாளர் - 15 (165/88)
சம்பள அளவுத் திட்டம் -
2700—60×10—70×10—4000 (31/97)
தகைமைகள்.
கூட்டுறவு ஆணைக்குழு 16 வது சம்பளத் திட்டத்தில் குறைந்தது ஒருவருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது 5 ஆம் வகுப்பில் சித்தி பெற்றிருப்பதுடன் சிறந்த திடகாத்திரமுள்ளவராய் இருத்தல் வேண்டும்.
வயது எல்லை.
18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.

(1) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.
(2) சங்கத்தில் கடமைபுரியும பணியாளர்களுக்கு நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் வயதெல்லை கூட்டுறவுப் பணியாளர்களுக்கு கணிக்கப்படமாட்டாது.
(3) நியமனத்தின்போது வைத்திய பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.
(4) விண்ணப்பப் படிவம் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 25 - செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

நேர்முகப் பரீட்சை.

மேற்படி பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை 22 7.2000 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தென்மராட்சி கிழக்கு பல நோ.கூ. சங்கம் மண்டபத்தில் நடைபெறும். பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதியுடன் குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகம் கொடுத்தல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ்.
(2) கல்வித் தகைமைச் சான்றிதழ்.
(3) சாரதி அனுமதிப் பத்திரம்.
(4) அனுபவச் சான்றிதழ்.
(5) வதிவிட சான்றிதழ்.
(6) இரு நற்சாட்சிப் பத்திரங்கள்.

பொது முகாமையாளர்,
தென்மராட்சி கிழக்கு ப நோ.கூ. சங்கம்,
கொடிகாமம்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்,
கொடிகாமம்,
(28.6.2000)
(இ606)

## தசாக கிரஹ ஜஞ்சு அழைப்பிதழ்

அன்புடையீர்!

விக்கிரம வருடம் ஆனி மாதம் 5ஆம் நாள் (19-06-2000) திங்கட்கிழமை மட்டக்களப்பில் சிவபதமடைந்த,

**பிரம்மஸ்ரீ ஐயாத்துரைக் குருக்கள் இராமலிங்கக்குருக்கள்**

அவர்களின் ஆத்மசாந்திக்கிரியைகள் மட்டக்களப்பில் நடைபெறும்.

01-07 2000 சனிக்கிழமை கந்தரோடையில் நண்பகல் கிரஹ ஜஞ்சும் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் வந்து கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

தம்பிமார், மக்கள், மருமக்கள்

ஐ. பாலசுப்பிரமணியம்
கல்லூரிமுன் கந்தரோடை,
சுன்னாகம்.

(1404)

யாழ்ப்பாணம் நூலகத்துறைப் படிப்பகம்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியே செல்வதற்காக 23 ஆம் திகதி வரை பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரங்களின் தொடர்ச்சி இங்கே பிரசுரமாகின்றது.

144398 பி
148026 பி
148026 சி
148161 ஏ
148161 சி
139567 ஏ
141229 ஏ
141262 பி
141770 பி
141971 பி
146979 ஏ
147099 ஏ
147099 சி
147102 ஏ
147121 பி
147158 பி
147303 ஏ
147345 ஏ

147998 ஏ
148026 ஏ
148026 பு
148161 பி
139566 ஏ
139567 பி
141261 ஏ
141277 ஏ
141971 ஏ
142013 ஏ
147098 ஏ
147099 பி
147099 டி
147121 ஏ
147158 ஏ
147303 ஏ
147303 சி

**யாழ்ப்பாணம்**

147897 பி
147927 ஏ
147927 சி
147949 ஏ
147949 சி
147949 ஏ
147951 ஏ
147964 சி
147966 ஏ
147976 ஏ
148002 ஏ
148002 சி
148027 ஏ
148047 ஏ
148049 ஏ
148054 ஏ
148075 ஏ
148104 பி
148116 ஏ
148120 பி
148120 டி
148122 ஏ
148122 சி
148191 ஏ
148214 ஏ
148214 சி
148219 ஏ
148220 ஏ
148878 ஏ
148974 ஏ
148974 சி

147897 சி
147927 பி
147927 டி
147949 பி
147949 பி
147962 ஏ
147964 பி
147964 டி
147966 சி
147976 பி
148002 பி
148027 ஏ
148027 சி
148047 பி
148049 பி
148054 பி
148104 ஏ
148116 ஏ
148120 ஏ
148120 சி
148120 சு
148122 ஏ
148122 பு
148191 பி
148214 பி
148214 டி
148219 பி
148220 பி
148878 சி
148974 பி

**சண்டிலிப்பாய்**

135789 ஏ
138451 ஏ
138451 சி
141683 பி
141841 ஏ
142032 ஏ
146982 ஏ
146988 ஏ
146988 சி
147082 ஏ
147101 ஏ
147116 ஏ
147419 ஏ
147435 ஏ
147437 ஏ

135881 ஏ
138451 பி
141683 ஏ
141684 ஏ
141894 ஏ
146972 ஏ
146987 ஏ
146988 பி
146988 டி
147082 பி
147101 பி
147116 பி
147419 பி
147448 ஏ

**தெல்லிப்பழை**

141306 ஏ
141842 ஏ
141957 ஏ
142051 பி

141842 ஏ
141842 பி
141957 பி
142051 பி

**கோப்பாய்**

147645 ஏ
147668 ஏ

147664 ஏ
143934 ஏ

**உடுவில்**

147631 ஏ
147657 பி
147663 ஏ
146981 ஏ
146986 பி
146994 ஏ
147072 ஏ
147097 ஏ
147137 பி
147155 ஏ
147301 ஏ
147316 பி
147338 ஏ
147350 பி
147379 ஏ
147439 ஏ

147617 ஏ
147657 ஏ
133821 ஏ
146986 ஏ
146994 ஏ
147000 ஏ
147097 பி
147137 ஏ
147143 ஏ
147155 பி
147316 ஏ
147319 ஏ
147350 ஏ
147351 ஏ
147380 ஏ
147439 பி

**நல்லூர்**

133204 ஏ
136803 ஏ
136810 பி
136818 பி
136821 ஏ
136824 ஏ
136824 சி
136825 ஏ
140963 பி
141022 ஏ
143194 பி
130167 பி
143147 பி
143166 பி
143166 டி

133204 பி
136810 ஏ
136818 ஏ
136819 ஏ
136821 பி
136824 பி
136824 டி
140963 ஏ
140975 ஏ
143194 ஏ
130167 ஏ
143147 ஏ
143166 ஏ
143166 சி
144398 ஏ

(*)


## விற்பனைக்கு

வெங்காயம் பொதி செய்யும் நெற்பேக் றெஜிபோம் மட்டைகள் சகல அளவுகளும றெஜிபோம பெட்டிகள் தொலைநகல் கருவி (FAX) தொலைக் காட்சிப்பெட்டி (T.V) நெசனல்பனை சோனிக்கெடக் கமூர் கதிரை

### ஸ்ரீ ராம் நாதன் களஞ்சியம்

213( , ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம.
தொலைபேசி:- 2916

(1399)



## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் 39வது ஆண்டுநிறைவை முன்னிட்டு எமது பிராந்திய சகல கிளைகளும் 01-07 2000 சனிக்கிழமை மு.ப 9 00மணியிலிருந்து மு.ப 11-00 மணிவரையும் வாடிக்கையாளர்களுக்காகத் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பிராந்தியமுகாமையாளர்,
யாழ்ப்பாணம்.

(இ-599)



பருத்தித்துறை

## புனித தோமையார் ஆலயத் திருவிழா

2-7-2000 மாலை 5-00 மணி [பு. நே]

## நற்கருணை வழிபாடும்

3-7-2000 காலை 7.15 மணி [பு. நே]

## திருநாள் திருப்பலி

அதி வணக்கத்திற்குரிய ஆயர்
தோமஸ் சவுந்தரநாயகம்
அவர்களின் தலைமையில் நடைபெறும்.

பங்குத் தந்தையும்
ஆலய மக்களும்.

(இ/607)


# சாவ. இந்து மாணவர் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து க.பொ.த. (சா/த) 2000, தோற்றும் மாணவர்கள் விபரங்களை இந்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன் இணுவில் மத்திய கல்லூரியில் அல்லது நெல்லியடி மத்திய கல்லூரியில் பதிவு செய்து கொள்ளுமாறு அதிபர் தெரிவித்துள்ளார். மேற்படி இரு கல்லூரிகளிலும் அடுத்த மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 2002 க.பொ.த (உ/த) வகுப்புகள் ஆரம்பமாகும் என்றும் அவர் கூறியுள்ளார். (சி)

# பெரும் போக விதை நெல்

(யாழ்ப்பாணம்)

கடந்த பெரும் போகத்தில் யாழ். மாவட்டத்தில் விவசாயத் திணைக்களத்தின் மூலமாகவும், கமநலசேவைத் திணைக்கள மூலமாகவும் விநியோகிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட இன நெல் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல் வைத்திருக்கும் விவசாயிகள் தங்களிடம் மேலதிகமாக இருக்கும் விதை நெல் பற்றிய விபரங்களைத் தங்கள் பகுதி விவசாயப் போதனாசிரியரிடம் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இந்த விதை நெல் பற்றிய விவரம் எதிர் வரும் பெரும் போகத்தில் மற்றைய நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகள் மட்டத்தில் பங்கப்பரம்பல் வழியாகப் பூர்த்தி செய்வதன் நோக்கமாகச் சேகரிக்கப்படுகின்றது. என்றும்யாழ். உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ச. சின்னத்துரை தெரிவித்தார். (சி)

# புகைத்தலின் விபரீதம் குறித்த அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

உலக புகைத்தல் தடுப்புத் தினத்தையொட்டி யாழ் குடாநாட்டிலும் புகைத்தலினால் ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளை மக்களுக்கு விளக்கும் உலகளாவிய ரீதியிலான கோட்பாட்டின் தாற்பரியத்தை உள்ளடக்கிய அறிவுறுத்தலை யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி நவமலர் சுந்தரத்தினம் பரவலாக வலியுறுத்தும் பணியை மேற்கொண்டார்.

இத்தினத்தையொட்டி சுகாதார அமைச்சு பல பிரசுரங்களை வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# யூ. என். எச். சி. ஆர். உதவியுடன் வன்னிக்கு மருந்துகள் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

மூன்றாவது காலாண்டுக்கான மருந்தும் பொருட்கள் லொறிமூலம் நேற்று வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யூ. என். எச். சி ஆர் வழித்துணையுடன் இம்மருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அடுத்தவாரம் இரு லொறிகள்மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அடுத்த மாதம் 7ம்திகதி மேலும் இரு லொறிகளில் மருந்துகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# வாரத்தில் மூன்று தினங்கள் கைதிகளை உறவினர்கள் பார்வையிட அனுமதிக்குக

## தொ. த. குழு உத்தரவு

(கொழும்பு)

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருப்பவர்களை வாரத்தில் மூன்று நாட்கள் பார்வையிடவும், கைதுசெய்யப்பட்ட உடனேயே உடுப்புக்கள் வழங்கவும் கைதிகளை சட்டத்தரணிகள் சந்திக்கவும் அனுமதிக்க வேண்டும் என்று தொல்லை தவிர்ப்புக் குழு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்பவர்களை ஒரு நாளே உறவினர்கள் பார்வையிட அனுமதிப்பதாகவும் கைதானவுடனே உடுபுடவைகள் வழங்க அனுமதிப்பதில்லை என்றும் கைதிகள் சட்டத்தரணிகளைச் சந்திக்க அனுமதிப்பதில்லை என்றும் கொழும்பு மாவட்ட எம்.பி. ஆர். யோகராஜன் முறையிட்டதை அடுத்து இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை அமைச்சர் டி.எம். ஜெயரத்தின தலைமையில் கூடிய போதே தொல்லை தவிர்ப்புக்குழு இவ்வுத்தரவை பொலிஸாருக்கு விடுத்துள்ளது. (ச-வ)

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் குமரகோட்டம் திருவருள்மிகு ஞானவைரவராலய மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை கிரியைகள் நடைபெறும். (சி)


## மெதடிஸ்த திருச்சபை

தொழில் பயிற்சி நிலையம்
161, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி ஸ்தாபனம் சகல வகுப்புகளையும் திங்கள் 03. 07 2000 அன்று ஆரம்பிக்க உள்ளது.

ஆசிரியர்கள் மாணவ மாணவிகள்
சமூகம் தரவும்.

(1408) நிர்வாகம்



## ஆண்டுப் பொதுக்கூட்டம்

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
யா/யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை

2000.07 16 ஞாயிறு காலை 10 00 மணிக்கு யா/யூனியன் கல்லூரி. மருதனார்மடத்தில் நடைபெறும சகலபெற்றோர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அதிபர்
யா. யூனியன்கல்லூரி.
மருதனார்மடம.

(இ-604)



உ

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஆனி மாதம் 18ம் நாள் (02-07-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9-15 மணி தொடக்கம் 10-15 மணி வரை வரும் சிங்க லக்கின சுபவேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**ஞானசுதன்**
(ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்)
அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி
**கிருபா**
அவர்களுக்கும்

திருவருள் துணைகொண்டு ஸ்ரீ நாகவரதநாராயணர் சந்நிதானத்தில் திருமணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து புதுமண தம்பதிகளை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. திருமதி குணபாலசிங்கம்
(வைத்திய சேவையாளர்)
நாகேஸ்வரம்,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

திரு திருமதி சின்னத்துரை
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
தம்மளை,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

(1366)

# சட்டவிரோத மின்பாவனையாளர் கடும் தண்டனை பெற நேரிடும்

## சபை வட்டாரங்கள் எச்சரிக்கை.

(யாழ்ப்பாணம்)

மின்சார சபை நேரிய முறையில் பாவனையாளருக்கு மின்சாரம் கிடைப்பதற்கான திட்டத்தினை வகுத்து, துரித கதியில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் இவ் வேளையில் பொறுப்பற்ற விதத்தில் சிலர் மின்சார துஷ்பிரயோகம் செய்து வருவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி அறிவுறுத்தப்படுகிறது

பல அசௌகரியங்களுக்கு மத்தியிலும் பாவனையாளர்களுக்கு தற்போது சுழற்சி முறையில் மின்சார விநியோகம் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் சிலர் சட்டவிரோதமான விதத்தில் மின்சாரத்தைத் தம் இல்லங்களுக்குப் பெற்றுக்கொள்வது மாத்திரமன்றி வேத். வெல்டிங் வேலைகளுக்குக் கூட பாவித்து வருவதைப் பரவலாக அவதானிக்க முடிகிறது. இத்தகைய செயற்பாடு முறையாக மின்சாரம் பெற்றுக்கொள்வோருக்கும் அனாவசியமான தடங்கலை ஏற்படுத்தக்கூடியது

இந்நிலை தொடர்ந்தும் நீடித்தால் மின்வலு அதிகரித்து முழுவிநியோகமுமே பாதிக்கப்படக்கூடிய விபரீத நிலை எழலாம். பொறுப்பற்ற குறுகிய சுயநலநோக்குக்கொண்ட சிலரால் நேர்மையான வழியில் விநியோகம் பெறுவோரும் பாதிப்புறவேண்டிய அவசியம் தான் என்ன?

எனவே நேர்மையான வழி பேணுவோரின் ஒத்துழைப்பையும் நாடிநிற்கும் அதே வேளை, குறிப்பிட்ட சட்டவிரோத பாவனை நபர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்ற எச்சரிக்கையையும் விடுக்க விரும்புகிறோம். தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் அரச சொத்தை அபகரிப்போர் துஷ்பிரயோகம் செய்வோர் மிகக் கூடிய கடும் தண்டனைக்கு உள்ளாக நேரிடும். எனவே இவ்விழிநிலை தொடருமாயின் சட்டத்தில் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

மேற்கண்டவாறு மின்சார சபையின் அதிகார பூர்வ வட்டாரங்கள் தெளிவுறத் தெரிவித்துள்ளன. (சி)

# ஏதிலியராயுள்ள இளஞ்சந்ததியின் ஏக்கம் போக்க ஏற்ற நடவடிக்கை

## இந்துசமய பேரவை செயலர் தகவல்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நெருக்கடி சூழ்நிலையின் எதிரொலியாக பலவேறு வகைகளிலும் ஏக்கமுற்று, ஏதிலியராய் அலைந்து அல்லற்படும் சிறுவர், சிறுமியர்க்கு அவர்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளியூட்டி அவர் தம் எதிர்காலத்தை ஏற்றமிக்கதாக ஒளிர்ந்திடச் செய்திட விரிவானதும், வலுவானதுமான திட்டம் ஒன்றினை யாழ். மாவட்ட இந்து சமயப் பேரவை வகுத்து துரித கதியில் செயற்படுத்தி வருவதாக இப்பேரவையின் செயலாளர் திரு.சி. சக்திகிரீபன் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இப்பேரவையின் அனுசரணையுடன் இயங்கி வந்த கைதடி சைவச் சிறுவர் அனாதை இல்லம் தற்போது ஏழாலை மேற்கில், உள்ள ஸ்ரீ சத்தியசாயி ஜனனி நிலையத்தில் இலரது மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

இவ்வகையில் வாழும் இளஞ்சந்ததியினரின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலை தற்போதைய அசாதாரண சூழ் நிலையால் தோன்றியுள்ளது.

எந்த நிலையையும் எதிர்கொண்டு, அவர்களது கல்வி, உணவு, உடை மற்றும் தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதத்தில் செயலாற்ற பரோபகாரி களினதும் மனித நேயம் கொண்டோரதும் மற்றும் பொது அமைப்புகளினதும் ஒத்துழைப்பைத் தமது பேரவை நாடி நிற்பதாகவும் திரு. சக்திகிரீபன் தெரிவித்தார். (சி)

# 675கோடி ரூபா செலவில் வடபகுதி அபிவிருத்தித் திட்டங்கள்

## ஐ. நா. உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும்

(கொழும்பு)

வடபகுதி அபிவிருத்தி வேலைகளுக்கு சுமார் 675 கோடி 50லட்சரூபா செலவு செய்யப்பட விருப்பதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் இந்த அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன

யாழ்ப்பாணக் குடா நாட்டில் மட்டும் சுமார் 671 கோடி 20லட்சரூபா செலவில் புனர்வாழ்வு உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட 12 வேலைத் திட்டங்கள் தொடர்பான சாத்தியக்கூற்று அறிக்கை ஒன்றை வடபகுதி மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் இரண்டு கோடியே தொண்ணூறுலட்ச ரூபா செலவில் 23 மின் விநியோகத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் எட்டுக் கிராமங்களுக்கு 1கோடி 40லட்ச ரூபா செலவில் மின் விநியோகம் ஏற்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையைச் சேர்ந்தசெல்வி நந்திதா உமாகாந்தன் என்னும் மாணவி கோட்டமட்டத்திலும்/உடுவில், வலிகாமம் வலயமட்டத்திலும் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு4-1 வாசிப்பில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (சி)

## பதவிஉயர்வு விண்ணப்படிவம் விநியோகம்

(கோப்பாய்)

கோப்பாய் கோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கான இலங்கை ஆசிரியசேவையில் பதவிஉயர்வு கோருவதற்கான விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுபற்றிய விளக்கக்கூட்டங்கள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் இடம்பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-79)

## கொக்குவிலில் கண்பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய், கொக்குவில். இணுவில் வட்ட லயன்ஸ் கழகங்கள் இணைந்து நடாத்திய நலிவுற்றோருக்கான கண்பரிசோதனை முகாம் மூலம் 200 பேர் வரை பயன்பெற்றனர்.

## திங்களன்று ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ரவன்ற் ரீயூட்டறி, நெல்லியடியில் (கோவில் சந்தைக்கு அருகில்) எதிர் வரும் திங்கட்கிழமை ஆரம்பமாக விருக்கின்றது இதில் தரம் 6 — 13 வரை வகுப்புகள் நடைபெறும்.

இடம் பெயர்ந்த மகளிர் கல்லூரி மாணவியர் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யவேண்டும் என்றும் ஏனைய பாடசாலை மாணவியரும் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது வடமராட்சியில் தங்கியுள்ள மகளிர் கல்லூரி ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்கவேண்டுமெனவும் அதிபர் திருமதி சிவத்திரை சிவநாதன் கேட்


### யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

215, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

### விசேட பொதுக்கூட்ட அழைப்பிதழ்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 15 07-2000 சனிக்கிழமை காலை 10 00 மணிக்குக் கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சற்புலத்து மனோன்மணி சனசமூக நிலையத்தில் சங்கத்தலைவர் திரு சி. சுந்தாலிங்கம் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறவுள்ளது.

சிறப்பு விருந்தினர்களாக திரு செ. க. சண்முகநாதன் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (நிர்வாகம்) திருமதி கோமதி திருநாவுக்கரசு கூ.அ உதவி ஆணையாளர் (கணக்காய்வு) கலந்து சொள்வார்கள். தயவு செய்து இக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் தரும்படி தங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

★ நிகழ்ச்சி நிரல் ★

★ கடவுள் வணக்கம்
★ தலைவர் உரை
★ சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
★ 97, 98, 99, காலக்கணக்காய்வு அறிக்கை சமர்ப்பித்தல்
★ புதிய நிர்வாகசபைக்கு ஒன்பது உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்.
★ சிறப்பு விருந்தினர் உரை.
★ நன்றி உரை.

சி. சுந்தாலிங்கம்
தலைவர்

(1398)



### கண்ணீர் அஞ்சலி

அல்வாய் ஆரியந்தோட்டம்

நா. சி. கதிரவேல் அவர்கள்

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றும்

லயன் க. கமலேஸ்வரன்

அவர்களின் பாசமிகு தந்தையார் நா. சி. கதிரவேல் அவர்கள் 28-6-2000 அன்று சிவபதமெய்தினார்.

அன்னாரின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம். சாந்தி சாந்தி சாந்தி

நலன் புரிங்கர்,
பிரதேச செயலகர்,
வடமராட்சி வடக்கு.
பருத்தித்துறை.

(சி-608)



### ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 1921 | 02 | 04



உதிர்வு: 1999 | 07 | 13

### அமரர் கந்தையா சின்னம்மா

திதி: 01-07-2000

அன்பு சொரிந்தெமக்கு அமுதூட்டி ஆளாக்கி
இன்புற வாழ்வித்து எமையெல்லாம் ஏங்கவிட்டு
துன்பமுறு நோய்வந்து தொல்லைவினை யறுக்க
அன்பரெல்லாம் அழுதுநிற்க ஆண்டொன்று
போயிற்றே!

ஆறிரண்டு மாதங்கள் ஆனாலும் எம்துயரம்
ஆறவில்லை அம்மாவே! ஆற்றிடுவார் எவருமில்லை!
தேற முடியாது தேம்பி அழுகின்றோம்
நூறாண்டு சென்றாலும் நூராது உம் நினைவு!

சின்னம்மா ஆச்சியென்றால் தேன் சொரியும் எவரிதழும்
அன்னம்மா எல்லோர்க்கும் அன்புமழைசொரிந்தம்மா
என்னம்மா எமைவிட்டு ஈராறு மாதங்கள்
சென்றதம்மா என்றாலும் இன்னும்நீர் எம்முடனே.

ஊனாட்சி செய்கின்ற உடல் விட்டு ஓராண்டு
வானாட்சிசெய்வதற்காய் வையகத்தை விட்டகன்றீர்
ஏனாச்சி எமைமறந்தீர் எங்குற்றீர்! எந்நாளும்
மீனாட்சி அம்பிகையின் திருவடிக்கீழ் சாந்திபெறும்!!

எமது குடும்பத் தலைவியின் ஆண்டுத் திவசக் கிரியைகளும், மதியபோசன விருந்துபசாரமும் 01-07-2000 அன்று எமதில்லத்தில் நடைபெறும். அதில் கலந்துகொண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவுச்சுமைகளுடன்

திரு. கந்தையா பாலசுப்பிரமணியம் (பாலு) 7ம் வட்டாரம் நயினாதீவு.

மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரி, உற்றார், உறவினர்.

(கி-593)

அன்பிலார் எல்லாந்
தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு
- குறள்

# வலம்புரி

## ஒரு தீங்கும் வரமாட்டாது

தெய்வம் நமக்குத் துணைஎன்றபாரதி, பாப்பாவைப் பார்த்து ஒருதீங்கும் வரமாட்டாது என்று கூறினான். அகோர ஷெல் வீச்சின் மத்தியில் கைதடி அநாதைச் சிறுவர்களை உளத்திரத்தோடு பக்குவமாக அழைத்து வந்த சிவம் செறிந்த ஜீவனை சிந்திக்கும் போது மெய் சிலிர்க்கும். தொண்டொடு கூடிய இறை நம்பிக்கை பளிச்சிட்டநிகழ்வு அதுவாகும். ஒரு இந்துப் பேரவையின் செயலராக பணியாற்றிப் பக்குவப்பட்ட உள்ளம். கிராம சேவகராக பணியாற்றும் அப்பெருந்தகை ஏழாலைக் கிராமத்திற்கு பெருமை சேர்ப்பவரில் ஒருவர்.

சின்னக் குழந்தைகள் சிவன் சேவடி போற்றி நடந்து வந்த காட்சி உள்ளத்தை உருக்கும். அம்பலம்லிங்க காலத்தில் துணையாக ஏதும்இல்லை, இல்லாதனயாவும் நிலையிலை என்று உணராத உள்ளங்கள்இருக்கும்வரை இருள் சூழ்ந்த உலகமே கண்ணுக்குத் தென்படும். இறை நம்பிக்கையும், இறைபணியும் தரும்மெய் இன்பம் மேலானது என்பதை தீர்க்கமாக உணர வேண்டும்.

ஆதரவற்றோரை அணைக்கும் கரங்கள் இறைவன் திருக்கரம் போன்றவையே அன்றைக்கு ஞான சம்பந்தன் அழுது அம்மையின் அரவணைப்பைப் பெற்றான். இன்றைக்கு அழுபவர் பலர். ஆனாலும் அன்று போல் ஆற்றிருமகனின் காட்சி எங்கே என்று ஏங்குகிறது இதயம்.

தார்மீக வழியில்மனக் குதிரையை ஓட்ட வேண்டும். மனம்போன போக்கில் மருகி அழியக்கூடாது. மாசற்ற நெஞ்சினராய் பிறன வாழ வகை செய்யவேவேண்டும். வளர்ச்சியில்மகிழ்வும் எய்தவேண்டும்.

இன்றைக்கு பெற்றோர் அற்றவர், சுற்றம் அறுந்தவர் படரக் கொழுகொம்பற்றகொடிகள் இல்லை. அணைக்க ஆயிரம் கரங்கள் உண்டு. பெரும் பணி புரியும் நிறுவனங்கள் பல் வேறு சமயங்களில்உண்டு.

அடையா நெடுங்கதவுடைய சடையப்பன்போல வள்ளன்மை கைவரப் பெற்றஈரநெஞ்சங்கள்பல்கிப் பெருக வேண்டும்.

ஆதரவற்றவர் என்ற சொல் எங்கள் சமூகத்தில் நிலை கொள்ளக்கூடாது.

-அன்புடன் ஆசிரியர்

---

# A/L தமிழ் - ஒகஸ்ற்

மாதிரிப் பரீட்சைகள் - 02

பரீட்-1 [பகுதி I 05-07-2000 புதன் 9-00 A.M.
[பகுதி II 07-07-2000 வெள்ளி 9-00 A M

பரீட் 2 [பகுதி I 17-07-2000 திங். 9-00 A.M.
[பகுதி II 18-07-2000 செவ். 9-00 A.M.

குறிப்பு: வெளிமாணவர்களும் தோற்றலாம்.

(பண்டிதர்) மாவை V. M. லிங்கம் (B.A Hons)

(1336)

---

# நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தரம் 1 முதல் O L வரையான வகுப்புகள் 02-07-2000 (ஞாயிறு) காலை 8-00 மணிக்கு ஆரம்பமாகிறது.

Spoken English
by MR. M. A. HARI

வகுப்புகள் 01-07-2000 [சனி] ஆரம்பமாகிறது.

(1411)

---

# அல்பா மிக்ஷர்

வாடிக்கையாளர்கள் எமது தயாரிப்புக்களை

★ பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தி யாழ்ப்பாணம்
★ உடுவில் வீதி, மானிப்பாய்
★ பொன்னாலை வீதி, சங்கானை (சந்திக்கருகாமையில்)

ஆகிய இடங்களிலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி - 601)

---

# ஆண்டவனை வேண்டுகிறோம்

அகில இலங்கைச் சமாதான நீதவான் பட்டத்துக்கே பெருமை சேர்த்த
எமது இசைத்துறைத் தலைவர்

திரு. ந. வி. மு. நவரெட்ணம் (M. Phil) J. P

அவர்கள் மேலும் நல்லனவெல்லாம் நிறைவாகப் பெற்றுப் பல்லாண்டு காலம் எங்கள் துறைத் தலைவராகவே வாழவேண்டுமென ஆண்டவனை வேண்டுகிறோம்.

தற்காலிக விரிவுரையாளர்,
இசைத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

]1414]

---

யாழ்/சாவகச்சேரி

# இந்து ஆரம்பப்பாடசாலை தற்காலிகமாக ஆரம்பித்தல்

மேற்படிபாடசாலை யா/இணுவில் மத்திய கல்லூரியில் 3-7-2000 ஆந்திகதி தொடக்கம் மாலை நேர பாடசாலையாக (பி.ப 1-4.30.மணி) இயங்கவுள்ளது. இப்பாடசாலையில்படித்தமாணவர்களும்ஏனையதென்மராட்சி வலய மாணவர்களும் இணைந்து கல்வி பயிலலாம் என்பதை தெரியப்படுத்துகிறேன்.

திரு. வ. கயிலேஸ்வரன்
அதிபர்.

(1420)

---

# அறிவித்தல்

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள பாடசாலைகள் யா/ சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் இயங்க இருப்பதால் அப்பாடசாலைக்கு அண்மையில் இடம் பெயர்ந்துள்ள மாணவர்களை எதிர் வரும் திங்கட்கிழமை (03.07 2000) பிற்பகல் 1.30 க்கு தம்மை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:-
க.பொ.த (சா.த) விண்ணப்பம் உடன் பூர்த்தி செய்ய வேண்டியிருப்பதால் யா/ கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி. யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், யா/ கைதடி குருசாமி வித்தியாலய மாணவர்கள் தவறாது சமுகமளிக்கவும்.

அதிபர்கள்

(1418)

---

## மீள் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உயர்தொழில் நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் முதலாம் வருட மீள் பரீட்சைகள் யாவும் எதிர் வரும் 3 ஆம் திகதி வழமையான நேர சூசிப் படி நடைபெறும் என மேற்படி நிறுவன இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(க)

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கதிர்காமம் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் நடைபெறும். இவ் உற்சவம் பதினெட்டாம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது

(க-03)

---

# திகழ் கல்வி நிறுவனம்

கே. கே. எஸ் வீதி, இணுவில்.

தென்மராட்சி முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்

ஆண்டு 6—11 வரை சனி ஞாயிறு வகுப்புக்கள்
ஆரம்பம்:- நாளை [2-7-2000] காலை 8 மணி

| | |
|---|---|
| கணிதம் | } P. சுரேஸ் |
| விஞ்ஞானம் | |
| தமிழ் | R. ரங்கநாதன் |
| சமூகக்கல்வி | } M. பார்த்திபன் |
| சமயம் | |
| வரலாறு | Y. இராஜேஸ்வரன் |
| ஆங்கிலம் | I. சடாதரன் |
| வர்த்தகம் | K. ஆதி |

O/L Day Class —பிரிவு I
ஆரம்பம்:- 03-07-2000 திங்கள் காலை 8 மணி

Note:- தென்மராட்சி மாணவர்களுக்கு விசேட சலுகைக் கட்டணம் வழங்கப்படும்.

[இ/609]

---

## க. பொ. த சா/ தரப் பரீட்சை - 2000

## விண்ணப்பித்தல்

யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலையில் கல்விகற்று தற்போது இடம்பெயர்ந்துள்ள க.பொ.த சா/தர மாணவர்கள் பின்வரும் இடங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்யவும்.

05-07-2000 காலை 8.30-12 00 மணிவரை
யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

07-07-2000 காலை 8.30-12.00 மணி வரை
யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.

அதிபர்
யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை.

(1425)

---

# The Barbara Mulvaney Computer Training Center

எமது நிறுவனத்தின் கணனிப்பயிற்சி வகுப்புகள் யாவும் 3 7-2000 (திங்கட்கிழமை) முதல் வழமை போல் ஆரம்பமாகுமென்பதை அறியத்தருகிறோம்.

இதுவரை காலமும் 758, Hospital Road என்ற விலாசத்தில் இயங்கிய எமது கல்வி நிறுவனமானது நிரந்தரமாக

The Barbara Mulvaney
Computer Training Center
123, Temple Road, Jaffna.
என்ற விலாசத்தில் இயங்குகிறது

அத்துடன் Computer, Type setting, Lazer printing & Stencil cutting) சம்பந்தமான அனைத்து வேலைகளும் செய்து கொடுக்கப்படும் எம்மிடம் Type Setting செய்ய ஓப்படைத்தவர்களையும் மேலுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பு:
எமது கல்வி நிலையத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தில் செயல்திட்டத்தின் கீழ் 1999 ஆண்டு இலவசமாக கணனிப் பயிற்சியை முடித்துக்கொண்ட சான்றிதழ் பெறாத 2ம் பிரிவு மாணவர்களை எமது புதிய விலாசத்தில் 10-7-2000 முன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

நிர்வாகம்.

(1413)

**கப்பல்...**

ஐந்து வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் கட்டணம் இன்றி பயணம் செய்ய முடியுமென்று சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இதுவரைகாலமும் மூன்று வயதில் இருந்து பன்னிரெண்டு வயதுக்குட்பட்டவர்களுக்கே அரை ரிக்கற் கட்டணம் அறவிடப்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கப்பல் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் 20கிலோவிற்குட்பட்ட பயணப் பொதிகளுடன் வரவேண்டுமென்றும் மேலதிகமானவை திருப்பி அனுப்பப்படுமென்றும் சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (3-சி

## இன்று கூட்டம்

பயிற்றப்படாத ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ். புதிய உயர் கல்லூரியில் நடைபெறும்.

**க. பொ. த.**

ரூபா40உம்ஆறில்இருந்து பன்னிரெண்டு பாடம்வரை ரூபா 50 உம் அறவிடப்படும்.

விண்ணப்பதாரிகள். பொதுப்பரீட்சை ஆணையாளர், தேசிய மதிப்பீட்டு பரீட்சை சேவைகள், இலங்கை பரீட்சைத் திணைக்களம் த. பெ. எண் 1503 கொழும்பு எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு கோரப்பட்டுள்ளது. (க.3)

## விரிவுரைகள் ஆரம்பம்

யாழ். திறந்த பல்கலைக் சமூக 2000 - 2001 கல்வியாண்டிற்கான முகாமைத்துவ இயந்திரவியல்கற்கை நெறிகளுக்கான ஆரம்பவிரிவுரைகள் இன்று 01.07 2000 காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகுமென தெரிய வருகிறது. (சு-40)

**இருவர்...**

41) கையிலும் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (க-12)

**யாழ்...**

களில் எம் முன் வைக்கப்பட்டலையாகுவும் இவை யாவும் எமது மக்களின் அடிப்படை சுயாட்சி உரிமையோடு இணைந்த அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்கவில்லை.

இத்தீர்வுத் திட்டங்கள் இரத்தமும் சதையும் அற்ற ஓர் எலும்புக் கூடே ஆகும்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கானயுத்த நிறுத்தம் ஒன்றை நாம் மேற்கொள்வதாக இருந்தால் யாழ். குடாவை ஆக்கிரமித்துள்ள இராணுவம் வெளியேற வேண்டும்.

இலங்கை அரசு யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக இராணுவத்தினருக்கு உத்வேகம் கொடுப்பதற்கு பல்குழல் எறிகணைகளை கொள்வனவு செய்திருப்பது தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்கேயாகும் இதற்கு சாவகச்சேரி யுத்தகளம் உதாரணமாகும்.

இத்தகைய எறிகணைகள் புலிகளிடமும் உண்டு. இதன் பிரயோகம் எத்தகையது என்பது எமது போராளிகளுக்கு தெரிந்தமையாலேயே இதுவரையில் நாம் அதைப் பயன்படுத்தவில்லை.

இந்திய அரசு 100 மில்லியன்ரூபாவைவழங்கியிருப்பது இலங்கையின் நிதிவளத்தைக் கூட்டுவதற்கான மனிதாபிமான உதவியாகஇருக்கலாம். அல்லது இராணுவத்திற்கு ஊக்கமளிப்பதாகவும் இருக்கலாம்.

ஆனால் வன்னியில் எம் மக்கள் உணவின்றியும். மருந்தின்றியும் செத்து மடியும் போது மனிதாபிமான உதவி வழங்குவதற்கு எவரும் முன்வரவில்லை என்றும் அவர் அப்பேட்டியில் கூறினார். (வ-ச)



## கண்ணீர் அஞ்சலி!

எமது பாடசாலை
அதிபர் திரு. த அழகரத்தினம்
அவர்களின் அன்புச் சகோதரர்

**தம்பையா சுப்பிரமணியம்**

உயரப்புலம் ஆனைக்கோட்டை அவர்கள் 29.06.2000 ஆம் வியாழக்கிழமை மரணம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!

யாழ்/ கொக்குவில் இந்து, ஆரம்பப்பாடசாலை.
ஆசிரியர்கள்
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்;
பாடசாலை சமூகம்.
(1415)

## கண்ணீர் அஞ்சலி

எமதுயாழ். பிரதேசசெயலகத்தைச் சேர்ந்த எழுதுநர்
திரு. க. மகேஸ்வரன்
அவர்களின் தந்தையார்

**நா. சி. கதிரவேல்**

அவர்கள் 28-6-2000 அன்று காலமானதையிட்டு மனம் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
நலன் புரிச்சங்கம்,
யாழ். பிரதேச செயலகம்.
(1410)

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

## அறிவித்தல்

அண்மையில் இடம் பெயர்ந்து தென்மராட்சி, மற்றும் அரியாலை கொழும்புத்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த அந்தண ப்பெருமக்கள் எமது தலைமை காரியாலயத்தில் எதிர்வரும் (10.07.2000) திகதிக்கு முன் தங்களுடைய குடும்பப் பிரிவு அட்டையுடன் தங்கள் விபரங்களை பதிவு செய்யும்படி வேண்டுகின்றோம்.

முக்கிய குறிப்பு:- இடம் பெயர்ந்து வடமராட்சியில் வசிப்போர் எமது அமைப்பின் வடமராட்சி கிளை செயலாளர் வீட்டில் பதிவு செய்யவும்.

தலைமைக் காரியாலயம்,
இல. 74, பிறவுண் வீதி,
நீராவியடி.
யாழ்ப்பாணம்,

வடமராட்சி
கிளை செயலாளர் வீடு,
சிவப்பிரம்மஸ்ரீ
ராம் செங்காதரக் குருக்கள்,
சாரதாபீடம் அல்லையம்பதி,
துன்னாலை.

பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா
பொதுச்செயலாளர். (1426)

## அறிவித்தல்

கரவெட்டி முன்பள்ளி ஆசிரியர் சங்க அபிவிருத்தி நிதிக்காக 25-06-2000 அதிஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது;

தலைவர்

செயலாளர்
முன்பள்ளி ஆசிரியர் சங்கம்
கரவெட்டி
(1429)

## தென்மராட்சிப் பாடசாலை

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி நிலைபைக் கருத்தில் கொண்டு யா/மல்லாகம் மகா வித்தியாலயத்தில் பி.ப. 1-30 - பி.ப. 5-00 மணிவரை தென்மராட்சிப் பாடசாலை நடைபெறும். மாணவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை (03-07-2000) பாடசாலையில் அனுமதி பெற்றுக் கல்வி கற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்,
தென்மராட்சிப் பாடசாலை
யா. மல்லாகம் மகாவித்தியாலயம்
மல்லாகம்.
(1424

உ

## தசாக இருகயக்ஞ அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விக்கிரம வருஷம் அனி மாதம் 9ம் திகதி (23 - 06 - 2000) வெள்ளிக்கிழமை
சிவபதமடைந்த

**திருமதி பட்டம்மா பேரானந்தசர்மா**

அவர்களின் தசாகாதி கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது.

ஆனி மீ 18 ஆம் திகதி (02-07-2000) ஞாயிறு தசாகம் காலை 10-00 மணி.
ஆனி மீ 19 ஆம் திகதி (03-07-2000) திங்கள் புண்ணிய வாசனம், ஏகோதிஷ்டம் (மாசியம்)
ஆனி மீ 20 ஆம் திகதி (04-07-2000) செவ்வாய் சபிண்டிகரணம்.
ஆனி மீ 21 ஆம் திகதி (05-07-2000) புதன் கிரகயக்ஞம் (சமாராதனை) 12-00 மணி

ஷெ கிரியைகளில் உறவினர்கள், நண்பர்கள் குடும்ப சகிதமாக பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

துளசி கோட்டம்
துன்னாலை,
கரவெட்டி.

இங்ஙனம்
குடும்பத்தினர்
(1431)

## இணுவில் பொருளியற் கல்லூரி

K. K S. றோட்,
இணுவில்.
இணைந்த கணிதம்
திங். - செவ். - புதன்
2001 A/L
★ ஒரு தள விசை
★ நேர் கோடு
2002 A/L
★ நிலையியல்
★ நுண் கணிதம்
நா. அம்பி B. Sc
ஆரம்பம் 3-7-2000
(1400)

## BARATHY

சித்தன்கேணி
இணைந்த கணிதம்
2002 A/L
நிலையியல்
வியா-3.30—5.30
வெள்ளி-3.30—5 30
நா. அம்பி B. Sc
[1401]

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை கனகசபாபதி

(கனகராசா)

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கனகசபாபதி அவர்கள் 28-06-2000 புதன் கிழமை அகாலமரணமானார்.

இவர்கந்தர்மடம் பொன்னுத்துரை மங்கையர்க்கரசி தம்பதிகளின் மகனும், உரும்பிராய் வடக்கு திருநாவுக்கரசு யோகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் சரோஜா அவர்களின் அன்புக் கணவரும், சுதர்சன் (கனடா), கலையரசி (வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவி), தாட்ஷாயினி (வேம்படி மகளிர் கல்லூரி ஆண்டு 10 மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29-06-2000 வியாழக்கிழமை மாலை இருளன் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.

சரோஜா கனகசபாபதி
(மனைவி) (1432)

### திருமதி மனோன்மணி நவீனச்சந்திரன்

வேலணை மணியகாறன் வீட்டடியைப் பிறப்பிடமாகக்கொண் திருமதி மனோன்மணி நவீனச்சந்திரன் (Ret Lap Asst. மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலை) 28 - 06 - 2000 அன்று பிரான்ஸில் காலமானார்.

இவர் தம்பிராசா நவீனச்சந்திரன் (பிரான்ஸ் முன்னாள் தியேட்டர் ரெக்னிசியன், மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலை) இன் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பையா, இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், நிருபன் (பிரான்ஸ்), சஞ்சஜன் (பிரான்ஸ்), நவதீபன் (பிரான்ஸ்), நாகதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ்சென்ற தம்பிராசா தங்கம்மா தம்பதிகளின் (உடுவில்) அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (முன்னாள் குடியேற்ற அதிகாரி), திருநீலகண்டன், தங்கரத்தினம், திலகவதி (இந்தியா), நாகரத்தினம் (கனடா), யோகவதி (ஆசிரியை), இராசலிங்கம் ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்), சுந்தரலிங்கம் (R D O, வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சொர்ணமலர் (டென்மார்க்), செல்வராசா (பிரான்ஸ்), இராசமனோகரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற பாக்கியலெட்சுமி(முன்னாள்ஆசிரியை), மற்றும் பாக்கியலெட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற செல்லத்துரை, நாகலிங்கம், இன்பநாயகம், காலஞ்சென்ற யோகரெத்தினம், கேதாரீஸ்வரி, பரமேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 03 - 07 - 2000 அன்று பிரான்ஸில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சு. சுந்தரலிங்கம்
(சகோதரன்)

49, ஸ்ரேசன் வீதி,
கொக்குவில்.
(கி/621)



இப்பத்திரிகை "[illegible]" அச் சேவ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வென்னாத்தெரு யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள அவ [illegible] அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.